**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**அவசரக் கூட்டப்பொருள்**

2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பொருள்கள்**

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 16.12.2010 | 1. இம்மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள 39 வார்டுகள் தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மாமன்றம் தனது தீர்மானம் எண்.17 நாள் 04–01–2010. முதல் ஆண்டு பராமரிப்பிற்கு ஒப்புதல் அளித்தும் மற்ற இரு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாமன்ற அனுமதியுடன் புதுப்பித்துக்கொள்ளவும் அனுமதி அளித்து உள்ளது. பராமரிப்பு பணிகளை செய்து வரும் மெசர்ஸ் சுதா இஞ்சினியரிங் நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக இருந்து வருவதால் ஜனவரி 2011 முதல் அடுத்த ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனத்தின் மூலம் செய்து கொள்ளவும் இப்பகுதிகளில் திட்டப் பணிகள் மூலம் புதிதாக பொருத்தப்பட்டுள்ள மற்றும் சுவிட்சுகளில் இணைந்துள்ள சோடியம் ஆவிவிளக்கு 26 குழல் விளக்கு 230 ஆகிய விளக்குகளை மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br>அலுவலகக் குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண்.14087/இ3/2010 | 251) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது. |
| | 2. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகர்ப்புற மலேரியா திட்டத்தின் கீழ் நகரில் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் இலகுரக புகைபோக்கி இயந்திரங்கள் ‘5’ எண்ணங்கள் பயன்படுத்த இயலாத நிலையில் பழுதடைந்துள்ளது. இவற்றை சரி செய்து பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளபடியால் மேற்படி இயந்திரத்தை விநியோகம் செய்த செங்கம் தாலுகா, துக்காப் பேட்டை நகரைச் சார்ந்த A. ஆரியாச்சாரி (நியூ பிரேட் ஆப்ஸ் பிரேயர் மெக்கானிக் ஒர்க்ஸ்) என்பவரிடம் சரி செய்து தர விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி பழுதுபட்ட இயந்திரங்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி செலவுத் தொகை குறிப்பிட்டுள்ளார். | 252) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | இயந்திரத்தின் பெயர் | பழுதுபார்க்கும் செலவு/ஒன்றிற்கு | மொத்தம் |
|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>வேன்பாக் ரக இயந்திரம்</td><td>ரூ. 14,150/–</td><td>ரூ 28,300/–</td></tr>
<tr><td>2</td><td>பிளாக் ஸ்டோன் ரக இயந்திரம்</td><td>ரூ. 12,400/–</td><td>ரூ.37,200/–</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>ரூ.65,500/–</td></tr>
</table>
<br>
எனவே அவசரம் அவசியம் கருதி பழுது அடைந்துள்ள ஐந்து இயந்திரங்களை சரி செய்து பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம் எச்1. 18871/10
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>3. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை இயக்குநர் அவர்களின் 16.11.2010ம் தேதிய ந.க.எண். 307/10/எ3 கடிதத்தின்படி கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு மாநகராட்சியின் சார்பாக 2010–2011ம் ஆண்டிற்கு வருடாந்திர பங்கு தொகையாக ரூ.1,00,000/– செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டது. அதன்படி பங்கு தொகை ரூ.1,00,000/–ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தார்க்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம் சி1. 18532/2010</td>
<td>253) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>4. இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுக்களின் தொல்லை, மழை காலமாக இருப்பதால் மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே கொசு புழுக்களை ஒழிக்க Fenthion 82.5% EC என்ற பூச்சி கொல்லி மருந்து 100லிட்டர் தேவையாக உள்ளது. நே.மு.க.எண்.60560/06/ஜெ2 நாள் 12.09.2009 என்ற கடிதத்தின்படி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களும் இதனை வாங்க பரிந்துரை செய்துள்ளார்கள். அவசர அவசியம் கருதி இந்த வேதி மருந்துகளை வாங்குவதற்காக ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ 1.70 லட்சமாகும் (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
குறிப்பு – 1 அனுமதிக்கலாம்.<br><br>
2.மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
எச்4.10463/2009</td>
<td>254) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. அலுவலகக்குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>5. இம்மாநகராட்சி ஒப்பந்தக்காரர் திரு. அந்தோணி பிலோமின் ஜாக்குலின் என்பவர் 2004–2005 வருடம் முன் வைப்புத் தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரூபாய் 3,493/– திரும்ப வழங்க கோரியுள்ளார் அன்னார் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூபாய் 3,493/–ஐ காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. அன்னாருக்கு அத்தொகையை திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.13627/10/பி3</td>
<td>255) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>6. இம்மாநகராட்சிக்கு 2010–2011ம் ஆண்டுக்கு பொன்விழா ஆண்டு நகர்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 14888/2010/UPA 3 நாள் 14–07–2010ல் உத்தேச ஒதுக்கீடாக ரூ 7,07,879/– அனுமதிக்கப் பட்டுள்ளது. இதில் தெற்கு சம்பந்தமூர்த்தி தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் தார் சாலை அமைக்க ரூ 6.50 லட்சத்திற்கு மாமன்றம் தனது தீர்மானம் எண். 134/26.5.2010ல் அனுமதி வழங்கியுள்ளது. தற்போது தெற்கு சம்பந்த மூர்த்தி தெருவில் ரூ 4.63 லட்சம் செலவில் மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் பணி</td>
<td>256) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | முடிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது முந்தைய மதிப்பீடுத் தொகை ரூ **6.50** லட்சத்தில் தார் சாலையும் அமைக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே தெற்கு சம்பந்தமூர்த்தி சாலையில் தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ **3.75** லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கவும், அதில் கூலி வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ **7,07,879/–**ல் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க செலவிடப்பட்ட ரூ. **4.63** லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ **2.45** லட்சத்தினை தார் சாலை பணிக்கு செலவிடவும் மீதமுள்ள தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** –அனுமதிக்கலாம். இ1/10102/2010 | |
| 7. | இம்மாநகராட்சி ஒப்பந்தக்காரர் திரு எக்ஸ். செல்வராணி என்பவர் 2004-05 மற்றும் 2005–2006 வருடம் முன் வைப்புத்தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரூபாய் 36,774/–ஐ திரும்ப வழங்க கேட்டுள்ளார். அன்னார் செலுத்திய ரூபாய் 36,774/ ஐ காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. அன்னாருக்கு அத்தொகை ரூபாய் 36,774/–ஐ திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 13629/10/பி3 | 257) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| 8. | இம்மாநகராட்சி நகர்நல பிரிவில் சுகாதார ஆய்வராக பணிபுரியும் திரு. ந. முருகேசன் என்பவர் இம்மாநகராட்சியில் 22–6–09 தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும் அன்னாரின் குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஈரோடு மாநகராட்சிக்கு பணி மாறுதலில் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்து விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – தூத்துக்குடி மாநகராட்சிப் பணியிலிருந்து ஈரோடு மாநகராட்சி பணிக்கு மாறுதலில் செல்ல விரும்பும் அன்னாரின் கோரிக்கையினை ஏற்கலாம். அன்னாரின் விண்ணபத்தினை தக்க நடவடிக்கைக்காக சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பலாம்.<br>சி1.21282/09 | 258) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| 9. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான சுந்தரவேல்புரம் 6வது தெரு ரோடு சம்பந்தமாக திரு.ஜோசப்பர்னாந்து என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண் ஒ.எஸ். 459/2000 தள்ளுபடி செய்யப்பட்டதினை எதிர்த்து மேற்படி வழக்கு தீர்ப்பின் மீது தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் A.S.No. 156/2010 மேல்முறையீடு வழக்கு மாநகராட்சி ஆணையரை 2வது பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்டுள்ளது. எனவே மேற்படி மேல்முறையீடு வழக்கில் மாநகராட்சி சார்பில் மாமன்ற வழக்கறிஞர் வழக்கு தொடரவும், வழக்கிற்கு ஆகும் செலவிற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எப்2/6564/2000 | 259) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| 10. | தூத்துக்குடி மாநகராட்சிப் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக சென்னை மற்றும் இதர வெளியூர்களுக்கு சென்று வந்ததற்கான பயணத்தொகை மற்றும் இதரப்படிகள் ஆகியவற்றை 2011 டிசம்பர் வரை உரிய விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு உடனுக்குடன் வழங்கவும், அதற்கான அதிகார அளிப்பை தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு எண். 13இன்படி மாநகராட்சி ஆணையருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு –** மாமன்றம், ஆணையருக்கு அதிகார அளிப்பு வழங்க அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.021789/09/பி4 | 260) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 11. | தூத்துக்குடி மாநகராட்சி சர்வே வார்டு எண். 2 பிளாக் எண். 14எ, நகரளவு எண் 1301/1பி2எ, 1301/65, 66, 67 மாநகராட்சி பொது பாதை என நகர நிலவரி திட்ட வட்டாட்சியர் அவர்களால் 27–7–2010ம் தேதி எ1/771/2010 எண்ணிட்ட செயல்முறை உத்திரவினை ரத்து செய்ய கோரியும் பிரதிவாதி தரப்பு பணியாளர்கள் எவ்வித இடைஞ்சல்கள் செய்ய கூடாது என தடை உத்திரவு கேட்டு திருமதி. லட்சுமி அம்மாள் திரு. பார்வதி என்பவர்களால் தூத்துக்குடி முதன்மை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ஓ.எஸ். எண்.492/10 IA NO. 2245/10 வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் மாமன்ற வழக்கறிஞர் வழக்கு தொடரவும் மேற்படி வழக்கிற்காகும் செலவுகளுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எப்**5/19011/10** | 261) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 12. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள நபர்களின் பட்டியலில் 2003 மற்றும் 2007ம் வருடம் மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்திராகாந்தி தேசீய முதியோர் உதவித் தொகை திட்டம், இந்திராகாந்தி தேசீய விதவை உதவித்தொகை திட்டம், மற்றும் இந்திராகாந்தி தேசீய மாற்று திறனாளிகள் உதவித்தொகை திட்டம் ஆகிய மத்திய அரசு திட்டங்களில் புதிதாக சேர்க்கப்படும் பயனாளிகளுக்கு வறுமைக்கோடு பட்டியல் எண் வழங்க வேண்டியது அத்தியாவசியமாகிறது என மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண். ந.க.எண். ஜி3/17561/2010 நாள் 25–11–2010 கடிதத்தில் தெரிவித்து உள்ளார்கள். மேலும் மேற்கண்ட கடிதத்தில் இந்திராகாந்தி தேசீய மாற்று திறனாளிகளின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கிட ஏதுவாக செப்டம்பர் 2010ம் மாதத்தில் நடத்தப்பட்ட மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு முகாமில் மொத்தம் 629 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். தேர்வு செய்யப்பட்ட தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுவதற்கான ஆணை உடனடியாக வழங்கப்பட வேண்டியது என முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது மாநில அரசின் திட்டத்தில் விதவை உதவித்தொகை பெற்று வரும் பயனாளிகள் அனைவரையும் இந்திராகாந்தி தேசீய விதவை உதவித்தொகை திட்டத்தில் சேர்க்க வேண்டும் எனவும் மேற்கண்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று புதிதாக வறுமைக்கோட்டு பட்டியல் எண் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திராகாந்தி தேசீய முதியோர் உதவித் தொகை வேண்டி விண்ணப்பித்தவர்களில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் தகுதிவாய்ந்த நபர்களின் பட்டியல் தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண். டி2/15145/2010 நாள் 20–11–2010ம் தேதிய கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டியல்களில் உள்ள நபர்களை வறுமைக்கோட்டு பயனாளிகளின் பட்டியல் சேர்த்து பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு பட்டியலில் எண் வழங்க வேண்டியது அவசியமாகிறது. ஏற்கனவே தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள நபர்கள் 10379 உள்ளனர் தற்பொழுது மேற்கண்ட வறுமைக்கோட்டு பயனாளிகளின் பட்டியலுடன் தற்பொழுது வரப்பெற்றுள்ள பயனாளிகளின் பட்டியல் உள்ள நபர்களை வறுமைக் கோட்டு பட்டியலில் சேர்ப்பதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க. எண்.**19368/2010** /எப்**6** | 262) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது. |
| | 13 | 2010–2011ம் ஆண்டில் இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு எழுது பொருட்கள் பதிவேடுகள் படிவங்கள் வாங்கவும் மற்றும் அச்சிட்டு பெறவும் செலவுத்தொகை | 263) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ16.00இலட்சத்திற்கு 26–5–2010ம் தேதிய மாமன்ற தீர்மான எண். 126ல் மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தொகைக்கான எழுதுபொருட்கள் வாங்கி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கொண்டும் எழுது பொருட்கள் தேவைப்படுவதால் உத்தேசமாக ரூ5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** - 1 அனுமதிக்கலாம்.<br>2.அவசரம் அவசியம் கருதி மாநகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் கூட்டுறவு நிறுவனத்தில் வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம். சி4.3622/10 | அனுமதிக்கப்பட்டது. |
| | 14. | இம்மாநகராட்சிப்பகுதி பிரையண்ட் நகர் 7வது தெரு மத்திய பகுதியில் சாலையின் நடுவில் ஒற்றைப்பனைமரம் உள்ளது. மேற்படி ஒற்றை பனைமரமானது வீடுகளுக்கு செல்லும் மின்கம்ப வயர்களுக்கு இடையூறாக உள்ளது. லாரிகள் கார்கள் போன்ற வாகனங்கள் தெருவில் உள்ளே வருவதற்கு கடினமாக உள்ளது. எனவே மேற்படி பனைமரத்தை தூத்துக்குடி மாவட்ட உதவி ஆட்சியர் அவர்களின் அனுமதி பெற்று அகற்ற வேண்டியயுள்ளது.<br><br>மேற்படி பனைமரமானது போக்குவரத்திற்கு இடையூறாகவும் பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்படுத்தும் வண்ணம் உள்ளதாலும் அகற்றுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/18247/2010 | 264) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது. |
| | 15. | இம்மாநகராட்சி பகுதிகளில் உள்ள 4 மண்டலங்களில் பொது சுகாதாரத்தை தனியார் மூலம் பராமரிப்பதற்கும் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கும் உரிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 12–8–2010ம் தேதியில் முதல் முறையாகவும் 8–9–2010ம் தேதியில் இரண்டாம் முறையாகவும், பைனான்சியல் எக்ஸ்பிரஸ் நாளிதழிலும் மதுரைமணி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு பைனான்சியல் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு செலுத்தவேண்டிய விளம்பர கட்டணத்தொகை ரூ 54,264/– என்றும், மதுரை மணி நாளிதழுக்கு செலுத்த வேண்டி விளம்பர கட்டணத்தொகை ரூ 2,432/– என்றும், வரிகள் ரூ 876/– என்றும் மேற்படி தொகைகள் எல்லாம் சேர்த்து வரும் மொத்த தொகை ரூ 57,572/–க்கு முதல் முறையாக விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய முதல் கட்டண பில்லினையும், இரண்டாம் முறையாக விளம்பரம் வெளியிட்டமைக்கு மேற்கண்டவாறு உள்ளதொகை ரூ 57,572/–க்கு உரிய இரண்டாவது கட்டண பில்லினையும் மேற்படி நாளிதழ்களின் உரிமையாளரான மெசர்ஸ் என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் (பி)லிட் நிறுவனத்தினர் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>மேற்படி இரண்டு விளம்பர கட்டண பில்களில் உள்ள விளம்பர கட்டணங்களின் மொத்த தொகை ரூ 1,15,144/– ஆக உள்ளது. எனவே மேற்படி மொத்த விளம்பர கட்டணத் தொகை ரூ 1,15,144/–ஐ மேற்படி மெசர்ஸ் என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழஙகலாம்.<br>எச்1/10003/2010 | 265) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | **16.** | இம்மாநகராட்சி பகுதி வார்டு எண். 41, 42 மற்றும் 43ல் அண்ணா நகர் 1 முதல் 12 தெருக்கள் உள்ளன. ஆனால் இத்தெருக்கள் அனைத்திற்கும் அண்ணா நகர் என்பதற்கு பதிலாக டூவிபுரம் மேற்கு 1, 2 என்று மாநகராட்சி கேட்பு பதிவேடு மற்றும் கணணியில் உள்ளது. ஆனால் வாக்காளர் பட்டியல், ரேஷன் கார்டு அஞ்சல்துறைகளில் எல்லாம் அண்ணா நகர் என்று உள்ளது. அதனால் தபால் துறையினர் விலாசம் கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளது என்று மாமன்ற உறுப்பினர் திரு எஸ்.பி. கனகராஜ் அவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள். எனவே டூவிபுரம் மேற்கு 1 முதல் 12 வரை உள்ள தெருக்கள் அனைத்திற்கும் அண்ணா நகர் 1 முதல் 12 வரை என்று மாநகராட்சி கேட்பு பதிவேட்டிலும், கணணியிலும் திருத்தம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – டூவிபுரம் மேற்கு 1 –12 தெருக்கள் என்பதை அண்ணா நகர் 1– 12 தெருக்கள் என்று திருத்தம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>அ6/18450/2010 | 266) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **17.** | இம்மாநகராட்சி சந்தை ரோடு சர்வே வார்டு 2 பிளாக் 1, நகரளவு எண். 26/2 கதவு எண் 24/6ல் பிரதிவாதிகள் திருமதி. மங்களம்மாள் திரு. ஜி. தனராஜ் மற்றும் திரு. சேகர் நிலையிலுள்ள கட்டிடத்தில் ஆராதனை கூடம் அமைத்து ஒளிப்பெருக்கி மூலம் ஆராதனை செய்வதால் பக்கத்தில் வசிக்கும் மக்களுக்கு இடையூறாக உள்ளது என திரு. சி. தர்மராஜ் என்பவர் தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.504/10 மற்றும் I.A. NO. 2267/10 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 6வது பிரதிவாதியாக மாநகராட்சி ஆணையாளரை சேர்த்துள்ளார். மேற்படி வழக்கினை எதிர்த்து வழக்கினை நடத்திட மாமன்ற வழக்கறிஞரை கோரலாம். மேற்படி வழக்கிற்கான செலவுகளுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். எப்5/19359/10 | 267) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 18 | இம்மாநராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த, நகர்மன்ற தீர்மானம் 14, நாள். 10.04.2003ன்படி முடிவெடுத்ததின் பேரில் மெசர்ஸ் வில்பர் ஸ்மித் அசோசியேட்ஸ், சென்னை நிறுவனம் அவர்களை தொழில் நுட்ப ஆலோசகராக நியமனம் செய்து மேற்படி நிறுவனத்தால் தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மூலம் மேற்படி திட்டம் இறுதி செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு , பணி மேற்கொள்ள வாரியத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மூன்று சிப்பங்களாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டமானது தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் 3ன் (TNUDP –III) கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.<br><br>இப்பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அரசு ஆணை எண்(டி)419, நாள்18.10.2005 இல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. நான்கு முறை ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வராத நிலையில், 5 வது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பணியின் போது ஏற்படும் கட்டுமான பொருட்களின் விலையேற்றம் மற்றும் இயற்கை இடர்பாடுகள் ஆகியவற்றினால் மதிப்பீட்டை விட கூடுதல் செலவினம் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு 31.10.2007இல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 01.12.2008 முதல் பாதாள சாக்கடைத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br><br>முதலில் இறுதி செய்யப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ46.40 கோடி எனவும், இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகள் ஆண்டொன்றுக்கு ரூ91.00 இலட்சங்கள் என திட்டம் மதிப்பீடப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்திடம் பெறப்படும் கடன் தொகையினை திரும்ப செலுத்த ஏதுவாக | 268) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானப் பணிகள் தொடர்பாக பல்வேறு தரப்பில் இருந்து வரப்பெற்ற எதிர்ப்பினைக் கருத்தில் கொண்டு மாமன்றம் நன்கு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.<br><br>இம்மாநகராட்சிக்குச் சொந்தமான புல்தோட்டம் பகுதியில் இருந்து தருவைகுளம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாற்றி அமைக்கத் |

| | | |
|---|---|---|
| | பாதாள சாக்கடை குழாய் இணைப்பு வேண்டுவோரிடம் வைப்புத் தொகை மற்றும் மாதாந்திரக் கட்டணம் வசூல் செய்யவும், அதற்காக மேற்படி நிதிநிறுவனத்திடமிருந்து கடன் மற்றும் மான்யம் பெற ஒப்பந்தம் செய்ய ஆணையருக்கு அதிகாரம் அளித்தும், இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 373, நாள் 05.10.2005 இன் படி ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>தமிழ்நாட்டில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செயல்படுத்தும் சுத்திகரிப்பு நிலையத்தினை தற்போது புதிய நவீன தொழில் நுட்ப மூலம் செயல்படுத்தலாம் என மாநில அளவில் அங்கீகரிப்பு கூட்டத்தில் 21.12.2005 ஆம் தேதியில் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் எந்த தொழில் நுட்பத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது சம்பந்தமாகவும் உயர்மட்ட தொழில் நுட்ப பொறியர் வல்லுநர்களால் மாநில அளவில் குழு அமைக்கப்பட்டது.<br><br>மேற்கண்ட உயர்மட்ட தொழில்நுட்ப குழுவினால் புல்தோட்டம் பகுதியினை 01.09.2007 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு தற்போது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தருவைகுளம் பகுதியில் WSP முறையில் இயக்குவதற்கு பதில், சென்னை, மும்பை, கோவா போன்ற பெரிய நகரங்களிலும், தமிழ்நாட்டில் தற்போது பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும், மாநகராட்சிகள் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மூலம் பெருங்குடி, கோயம்பேடு மற்றும் விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் ASP (Activated Sludge Process) முறையில் மேற்படி திட்டமானது நன்கு செயல்பட்டு வருவது போன்று இம்மாநகராட்சியிலும் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டது.<br><br>அதன் அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் சர்வே எண் 352/2,36/1 வார்டு 2 , பிளாக் 3 இல் அமைந்துள்ள 5.22 ஏக்கரில் ஆக்டிவேட்டட் ஸ்லட்ஜ் பிராசஸ் (ASP) என்ற நவீன முறையில் செய்வதற்கு ஏற்கனவே புல்தோட்டமாகவும் கழிவுநீர் பயன்படுத்தப்படும் இடமாகவும் இருப்பதாலும் மற்றும் குறைந்த அளவே பம்பிங் செய்ய வேண்டியிருப்பதாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பணி செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ASP (Activated Sludge Process) முறையில் செயல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.<br><br>மேலும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ASP (Activated Sludge Process) முறையில் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்த ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினத்திற்கு திருத்திய திட்ட மதிப்பீடு தொகை ரூ82.82 கோடிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(மாந2) அரசு ஆணை எண்(டி) 551, நாள் 30.12. 2009 இல் திருத்திய நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு இம்மாமன்றம் 04.01.2010 ஆம் தேதி, தீர்மானம் எண்1, இல் ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>மேற்படி சுத்திகரிப்பு நிலையம் இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல் தோட்டம் பகுதியில் அமைப்பதற்கு 15.10.2008 இல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் தடையில்லா சான்று வழங்கப்பட்டு, 31.03.2010 இல் கட்டுமான பணி மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய தக்க உத்தரவு வழங்கியுள்ளது. அதன் பேரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மெசர்ஸ்,சேகர் தீபக் சென்னை கம்பெனியினரால் 01.04.2010 முதல் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் கடந்த மூன்று மாதங்களில் பணிகள் நடைபெறும் போது எவ்வித எதிர்ப்புகளையும், அப்பகுதி பொது மக்கள் தெரிவிக்கப்படவில்லை.<br><br>இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல் தோட்டம் பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிக்கான சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கூடாது என இப்பகுதியைச் சுற்றியுள்ள வார்டு எண்20,34 மற்றும் 35 இல் உள்ள பொது மக்கள், | தீர்மானிக்கப்பட்டது.<br><br>கழிவுநீர் சத்திகரிப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க ஏற்படும் கூடுதல் செலவினம் தோராயமாக ரூ.9.00 கோடியை மேற்படி திட்ட மதிப்பீடுடன் சேர்த்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.<br><br>கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள் சம்பந்தமாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.2.64 கோடியினை மாநகராட்சி பொதுநிதியில் ஈடு செய்ய இயலாத நிலையில் நிதிநிலை இருப்பதை கருத்தில் கொண்டு மேற்படி தொகையினையும் திட்ட மதிப்பீட்டுடன் சேர்த்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. |

குடியிருப்பு நல சங்கங்கள், மக்கள் பாதுகாப்பு இயக்கம், மற்றும் வியாபார பெரு மக்கள், 07.06.2010இல் எதிர்ப்பு தெரிவித்தும், 18.06.2010இல் சுத்திகரிப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றக் கோரிமக்கள் பாதுகாப்பு இயக்கத்தினரால் மாநகராட்சி முன்பு ஆர்ப்பாட்டமும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடமும் கோரிக்கை மனுவும் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொதுமக்கள் 07.07.2010இல் உண்ணாவிரதமும் இருந்து எதிர்ப்புகளை வெளிப்படுத்தினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நவீன முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுவதால் எவ்வித பாதிப்பு வராது என பொது மக்களுக்கு 19.06.2010 இல் விளக்கவுரை வழங்கப்பட்டது.

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தொடர்ந்து கட்டுமான பணிகள் நடைபெறுவதற்கு 01.07.2010 முதல் அப்பகுதி பொது மக்களால் பணி நடைபெரும்மிடத்திற்கு வரும் கட்டுமான பொருட்கள் கொண்டு வரப்படும் வாகன ஓட்டுநர்கள் மற்றும், பணியாளர்கள் இவ்வெதிர்ப்பின் காரணமாக சில நாட்கள் பணியாட்கள் வராது தடைபெற்று பணிகள் தொடர்ந்து நடைபெறவில்லை. மேலும் அப்பகுதி பொதுமக்கள் பாதுகாப்பு இயக்கம் 14.07.2010 இல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் வரை தொடர் போராட்டம் மற்றும் முற்றுகை போராட்டம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்கண்ட போராட்ட குழுவினரால் மேற்கண்ட சுத்திகரிப்பு நிலைய இடத்தை 19.07.2010இல் முற்றுகையிட்டு பணிகளை உடன் தடுத்து நிறுத்தினர். சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்ற மாநகராட்சி அதிகாரிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள், மற்றும் வருவாய்க் கோட்ட ஆட்சியர் ஆகியோரை சிறைப்பிடித்து முற்றுகை போராட்டம் நடத்தினார்கள். பின்பு அதிகாரிகள் காவல் துறையின் மூலம் மீட்கப்பட்டனர். இதனால் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

மேற்கண்ட கட்டுமான பணிக்கு இது வரை ரூ2.64 கோடி செலவிடப்பட்டுள்ளது.. மேலும் மேற்படி கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைபெற காவல் துறை மூலம் தொடர் பாதுகாப்பு வழங்க இயலாத நிலை உள்ளது என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர் அவர்களின் 22.11.2010 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் 11.11.2010 அன்று மாநகராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சமாதான கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களில் முக்கிய பிரமுகர்கள் மீண்டும் அப்பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முற்பட்டால் அப்பகுதி பொது மக்கள் அனைவரும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவர் எனவும், சமுதாய ரீதியலான பிரச்சனை எழ வாய்ப்புகள் ஏற்படும் எனவும் தெரிவித்தார்கள்.

அ) எனவே மேற்கண்ட சூழ்நிலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானப் பணிகள் சம்பந்தப்பட்ட பகுதி பொது மக்கள் எதிர்ப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தகவல் மாமன்றத்தின் பார்வைக்கும், கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைபெறமால் உள்ளது குறித்து மாமன்றத்தில் வைக்கப்படுகிறது

ஆ) எனவே இம்மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் இருந்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை வேறு ஒரு இடமான தருவைகுளம் பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாற்றி அமைப்பது பற்றி மாமன்றம் பரிசீலித்து முடிவக்கு வைக்கப்படுகிறது.

இ) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க ஏற்படும்

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>கூடுதல் செலவினம் ரூ9.00 கோடி ஆகும்.<br><br>ஈ) மேலும் ஏற்கனவே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் சம்பந்தமாக இது வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ 2.64 கோடியினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்ய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும் என்பதும் மாமன்றத்தின் பார்வைக்குக்கும் முடிவுக்கும் .<br><br>அலுவலக குறிப்பு 1. மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>இ3 /11512 /2007-STP</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>19.</td>
<td>இம்மாநகராட்சி சர்வரில் SYMANTEC ANTIVIRUS 10 users (SERIAL NO.M.1065827563) மென் பொருளுக்கான Virus Definition காலாவதியாகிவிட்டதால் அதனை கால நீட்டிப்பு செய்து புதுப்பிப்பதற்கு கீழ்க்கண்ட விவரப்படி மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>
<table>
<tr><th>வ எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1)</td><td>மெசர்ஸ் HCL Info systems limited தூத்துக்குடி. 3</td><td>ரூ 15000/– + ரூ 2000/–(10 users) + வரிகள் தனி</td></tr>
<tr><td>2</td><td>மெசர்ஸ் (Ultra power solusion மதுரை .1</td><td>ரூ.23000/– + 3500/–(10 users)</td></tr>
<tr><td>3</td><td>மெசர்ஸ் Transcend system மதுரை 17</td><td>ரூ. 25000/– +4000 (10 users) + வாட் மற்றும் விற்பனை வரி தனி.</td></tr>
</table>
மேற்படி மூன்று நிறுவனத்தினரின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் HCL Infosystems Limited நிறுவனத்தினர் தொகை ரூ 17000/–க்கு கொடுத்துள்ள விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளை விட மிகவும் குறைவாக உள்ளது.<br><br>எனவே மேற்படி மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு –<br><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>2) ஏற்கனவே இம்மாமன்றம் தனது 23–8–2010ம் தேதிய 184ம் எண் தீர்மானத்தில் மேற்படி மென்பொருளுக்கான Virus definition ஐ மெசர்ஸ் HCL நிறுவனத்தின் மூலம் புதுப்பிப்பதற்கும் மேற்படி வகைக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ 15000/–க்கும் அனுமதி வழங்கியுள்ளது. தற்போது மேற்படி HCL நிறுவனத்தினர் தனது மிகக் குறைந்த விலைப்புள்ளியை ரூ 17000/– தொகைக்கும் வரிகள் தனி என்றும் குறிப்பிட்டு கொடுத்துள்ளனர். எனவே மேற்படி வகைக்கு கூடுதல் ஆக வரும் செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம் இ5/12737/10</td>
<td>269) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>20.</td>
<td>இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படி உள்ள கணிணி மற்றும் இதர பொருட்களுக்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது.</td>
<td>270) அலுவலகக் குறிப்புப்படி குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 1 | HCL Computers | 8 Nos. |
| 2 | Commissioner Laptop | 1 No. |
| 3 | Executive Engineer Laptop | 1 No. |
| 4 | Water supply Laptop | 1 No. |
| 5 | Line Printer T6 215L | 1 No. |
| 6 | Calor Printer CP2025n | 1No. |
| 7 | PROJECTOR | 1No. |

மேற்படி பொருட்களை வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு கீழ்க்கண்ட விவரப்படி மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வரிசை எண் | நிறுவனத்தினர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் HCL Infosystems limited தூத்துக்குடி.3 | ரூ 187920–12 |
| 2 | மெசர்ஸ் GALAXY COMPUTERS திருநெல்வேலி–2 | ரூ 198870–90 |
| 3 | மெசர்ஸ் Ultra Power Solusions மதுரை– 1 | ரூ 204714–00 |

மேற்படி மூன்று நிறுவனத்தினரின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தினர் தொகை ரூ 187920/– 1 வருடத்திற்கு பராமரிப்பு செய்ய கொடுத்துள்ள விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளை விட மிகவும் குறைவாக உள்ளது.

எனவே மேற்படி மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்வதற்கும் மேற்படி நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள HCL Infosystems limited
அவர்களின் தொகை ரூ. 187920/– ஏற்கலாம்.
இ5/12738/2010

**21.** இம்மாநகராட்சி கணிணி பிரிவில் உள்ள கணிணிகள் உபயோகமற்ற நிலையிலும் மிகவும் மெதுவாக இயங்கும் நிலையிலும் உள்ளதால் மேற்படி கணிணிகளை உயர்நிலை மாற்றம் செய்வதற்கு கீழ்க்கண்ட மூன்று நிறுவனத்தினர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வரிசை எண் | நிறுவனத்தினர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் HCL Infosystems limited<br>தூத்துக்குடி.3 | ரூ 28000 –00 + ரூ 1120–00 (4% வாட் வரி தனி) |
| 2 | மெசர்ஸ் Ultra power solution. மதுரை 1 | ரூ. 34000–00 |
| 3 | மெசர்ஸ் Transcend systems மதுரை 17 | ரூ, 34000–00 + வாட் மற்றும் விற்பனை வரிகள் தனி |

மேற்படி மூன்று நிறுவனத்தினரின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தினர் தொகை ரூ 29120/–க்கு கொடுத்துள்ள விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளை விட மிகவும் குறைவாக உள்ளது.

எனவே மேற்படி மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்வதற்கும் மேற்படி நிறுவனத்தினருக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) ஏற்கனவே இம்மாமன்றம் தனது 30–7–2010ம் தேதிய 179ம் எண் தீர்மானத்தில் மேற்படி 5 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள 17 எண்ணம் கணிணிகளை உயர்நிலை மாற்றம் செய்வதற்கும் பிரின்டர் முதலான இதர சாமான்களை D.G. S.T ரேட் விலை விகிதத்தில் வாங்குவதற்கும், மேற்படி வகைக்கு ஆகும் செலவினத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. எனவே மேற்படி மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தினர் கொடுத்துள்ள மிகக் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ 29120/–க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேற்படி கணிணிகளில் முதல் கட்டணமாக 10 எண்ணம் கணிணிகளையும் அடுத்த கட்டமாக மீதியுள்ள கணிணிகளையும் மேற்படி மெசர்ஸ் HCL Infosystems limited நிறுவனத்தினர் மூலமாக உயர்நிலை மாற்றம் செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/12735/2010

271) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | **22.** தூத்துக்குடி நகரத்தின் மையப் பகுதியில் பழைய பேருந்து நிலையம் (அறிஞர் அண்ணா பேருந்து நிலையம்) சுமார் 1.50 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த பேருந்து நிலையம் நகரில் நெருக்கடி நிறைந்த பகுதியில் இருப்பதாலும் பேருந்து நிலைய பரப்பளவு குறைவாக இருப்பதாலும் இந்த பேருந்து நிலையம் எதிர்கால தேவைக்கு பற்றாக்குறைவாக உள்ளதாலும் தூத்துக்குடி போக்குவரத்து வளர்ச்சி அதிகமாக உள்ளதாலும் எட்டையாபுரம் ரோட்டில் மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ள சுமார் 10.00 ஏக்கர் நில பரப்பளவு கொண்ட இடத்தில் புதிய பேருந்து நிலையம் மாநில ஒருங்கிணைப்புத்திட்டத்தின் கீழ் கடனாக பெற்று அமைக்க தூத்துக்குடி நகரமன்றத்தின் 28–4–1987ம் தேதிய 323ஆம் எண் தீர்மானத்தின் படி ஒப்புதல் பெற்று புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.<br><br>தற்போது தூத்துக்குடி நகராட்சி கடந்த 5–8–2008 முதல் மாநகராட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்தில் நிலவி வரும் போக்குவரத்து நெருக்கடியை கருத்தில் கொண்டு திருநெல்வேலி மற்றும் திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரி மாவட்டம் செல்கிற புற நகர் பேருந்துகளை பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்படுவதற்குப் பதிலாக புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்திரவிடப்பட்டது. தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்தின் நெருக்கடியை குறைக்க வெளியிடப்பட்ட மேற்கண்ட உத்தரவை எதிர்த்து தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் உரிமை பாதுகாப்பு பேரவை தலைவர் திரு.மு. சத்யாலெட்சுமணன் என்பவர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு எண் 12444/2010 மற்றும் பலவகை மனு எண்கள் 1, 5/2010ன் படி சென்னை உயர்நீதி மன்றம் 31–8–2010ல் வழங்கிய தீர்ப்பின்படி தூத்துக்குடி மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தின் இட நெருக்கடிகளை குறைக்க சுமூகமான பாதுகாப்பான நெருக்கடியற்ற பேருந்து நிலையத்தை நடைமுறைப்படுத்த தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகமானது மாநகராட்சி உறுப்பினர் கூட்டத்தில் இந்த பொருள் குறித்து விவாதித்து பேருந்து இயக்க முறையை மாற்றுவது குறித்து இறுதி தீர்மானம் நிறைவேற்றி தீர்மான அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் போக்குவரத்து அதிகாரி (Regional Transport Authority) தூத்துக்குடி அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடி அவர்களின் ந.க.எண். 3243 இ1 / 2010 நாள் 25–10–2010ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>தூத்துக்குடி நகரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு தரம் உயர்த்தப்பட்டு தூத்துக்குடி மாநகராட்சியாக 5–8–2008 முதல் செயல்பட்டு வருகிறது. பழைய பேருந்து நிலையம் சுமார் 1.50 ஏக்கர் குறைவான பரப்பளவில் அமைந்துள்ளது. பழைய பேருந்து நிலையத்தில் நாள் ஒன்றுக்கு புற நகர் பேருந்துகள் 585 தடவையும் நகர் பேருந்துகள் 377 தடவையும் சிற்றுந்துகள் 1156 தடவையும் வந்து செல்வதால் மிகுந்த போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. தூத்துக்குடி மாநகரில் பழைய பேருந்து நிலையத்தில் இட பற்றாக்குறைவினால் சிற்றுந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகள், பேருந்து நிலையத்திற்குள் செல்லாமல் மாநகரில் ஆங்காங்கே பேருந்து நிலையத்தின் வெளிப்பகுதியில் நிறுத்தப்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு வசதி குறைவாகவும் போக்குவரத்து நெருக்கடியும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. புதிய பேருந்து நிலையம் சுமார் 10.00 எக்கர் பரப்பளவில் ஒரே நேரத்தில் சுமார் 50 | 272) தற்போது இடவசதி குறைவாக உள்ள பழைய பேருந்து நிலையத்தில் அதிகப்படியான பேருந்துகள் வந்து செல்வதால் போக்குவரத்து நெருக்கடி மிக அதிகமாக உள்ளது. மாநகரில் தற்போது நிலவிவரும் போக்குவரத்து நெருக்கடியினை குறைக்கும் பொருட்டும், மாநகரில் சிற்றுந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகள், பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லாமல் ஆங்காங்கே நிறுத்துவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், பழைய பேருந்து நிலையத்தில் தற்போது நிலவிவரும் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க போக்குவரத்து இயக்க முறையை குறிப்பாக திருச்செந்தூர் மற்றும் திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு செல்கின்ற புறநகர் பேருந்துகளை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படுவதற்குப் பதிலாக புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட வேண்டும் எனவும் மாநகரில் ஆங்காங்கே நிறுத்தி இயக்கப்பட்டு வரும் சிற்றுந்துகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | பேருந்துகள் நின்று செல்லும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் IDSMT திட்டத்தின் கீழ் சுமார் 1.07 கோடி கடனாக பெற்று கட்டப்பட்டுள்ளது. தற்போது புதிய பேருந்து நிலையத்தில் அதிக இடவசதி இருந்தும் பேருந்துகள் குறைவாக வந்து செல்கின்றன. இட வசதி குறைவாக உள்ள பழைய பேருந்து நிலையத்தில் அதிகபடியான பேருந்துகள் வந்து செல்கின்றன. இதனால் தூத்துக்குடி மாநகரில் போக்குவரத்து நெருக்கடி மிக அதிகமாக உள்ளது. மாநகரில் தற்போது நிலவி வரும் போக்குவரத்து நெருக்கடியினை குறைக்கும் பொருட்டும் மாநகரில் சிற்றுந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லாமல் ஆங்காங்கே பஸ்களை நிறுத்துவதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாலும் பழைய பேருந்து நிலையத்தில் தற்போது நிலவி வரும் போக்குவரத்து நெருக்கடியை குறைக்க போக்குவரத்து இயக்க முறையை திருச்செந்தூர் மற்றும் திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு செல்கின்ற புற நகர் பேருந்துகளை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு பதிலாக புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட வேண்டும் எனவும் மாநகரில் ஆங்காங்கே நிறுத்தி சிற்றுந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகளை புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு செல்லவும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – போக்குவரத்து இயக்கம் மாற்றம் தொடர்பான மாமன்றத்தின் முடிவினை தீர்மான வடிவில் உரிய உத்தரவு வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வட்டார போக்குவரத்து அதிகாரி தூத்துக்குடி அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எப்1.10905/2010 | ஆம்னி பேருந்துகளையும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு உரிய உத்திரவு பிறப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வட்டார போக்குவரத்து அதிகாரி தூத்துக்குடி அவர்களை கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. |
| | **23** | தூத்துக்குடி மாநகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து 30–5–2010ல் காலம் சென்ற திருமதி ஜான்சிராணி என்பவருக்கு அன்னாரின் ஊதியத்தில் 1/8/1991 முதல் 30.11.2003 வரை ரூ 20/– வீதம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள சிறப்பு சேமநலநிதி மற்றும் வட்டி தொகை ரூ 5021/–ம் 1–12–2003 முதல் 30–5–2010 வரை வட்டி தொகை ரூ 3269/–ம் ஆக மொத்தம் ரூ 8290/– வாரிசு சான்றிதழின்படி அன்னாரின் மகன் திரு. ஜே. மனோகரன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>சி4/13999/2010 | 273) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது. |

மாமன்றம் தூத்துக்குடி
நாள் 15–12–2010

மேயர்
மாமன்றம் தூத்துக்குடி